**செய்தி வெளியீடு எண்: 239** **நாள்: 12.04.2018**

## சென்னை, அடையாறு புற்றுநோய் சிகிச்சை மைய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (12.4.2018) ஆற்றிய உரை

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்களே!

மாண்புமிகு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்களே !

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர்
திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களே

மாண்புமிகு மத்திய இணை அமைச்சர்
திரு.பொன் ராதாகிருஷ்ணன் அவர்களே,

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் விஜய பாஸ்கர் அவர்களே,

மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !

அடையார் புற்றுநோய் மையத்தின் இயக்குநர்
டாக்டர் சாந்தா அவர்களே,
மற்றும் இம்மையத்தின் நிர்வாகத்தினரே !
இம்மையத்தில் பணிபுரியும்
மருத்துவர்களே, செவிலியர்களே மற்றும் பணியாளர்களே,

பெரியோர்களே! தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஆரோக்கியம்தான் மற்ற
எல்லாச் செல்வங்களைவிடவும் சிறந்தது.

இன்னும் சொல்லப்போனால் மற்ற
எல்லா செல்வங்களையும் அனுபவிக்கவும்,
ஆரோக்கியம் இன்றியமையாததாய் திகழ்கிறது.

மகாபாரதத்தில் தர்மரின் பேரறிவை அறிய
ஒரு கேள்வி கேட்கப்படும்.

‘‘மனிதன் ஈட்டவேண்டிய மகத்தான செல்வம் எது **?**’’
என்பது கேள்வி.

‘‘ஆரோக்கியம்’’ என்பதுதான் தர்மரின் பதில்.

இதைத்தான் நமது முன்னோர்கள்
‘‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’’
என்று ரத்தினச் சுருக்கமாகச் கூறினார்கள்.

புற்று நோயைக் குணப்படுத்த பல அளப்பறிய
மருத்துவ முறைகளை மருத்துவ உலகம்
கண்டுபிடித்து வருகிறது.

அந்த வகையில், புற்றுநோயிலிருந்து
மக்களை காப்பாற்றும் பணியில்
ஆரம்ப காலங்களில் பெரும் பங்கு வகித்தவர்
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள்.
அவரை பின்தொடர்ந்து இன்றளவும் அந்த பணியில்
மகத்தான சேவை ஆற்றிக் கொண்டிருப்பவர்
டாக்டர் வி.சாந்தா அவர்கள்.

**“நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்”**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க
இப்புற்றுநோய் சிகிச்சை மையம்,
அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஏழை, எளிய
மக்களுக்கு தரமான அறிவியல் ரீதியான
புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் பொருட்டு,
64 ஆண்டுகளுக்கு முன் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி
அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது.

இந்த மையம் ஒரு சிறிய குடிலில் 12 படுக்கைகளுடன்
1954ல் தொடங்கப்பட்டு, இன்று அது
535 படுக்கைகளுடன் ஒரு புகழ் பெற்ற
ஒப்புயர்வு சிகிச்சை மையமாக திகழ்கிறது.
இங்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 12 ஆயிரம்
புதிய புற்று நோயாளிகளும்,
1 லட்சத்து 51 ஆயிரம் தொடர் சிகிச்சை பெறும்
புற்று நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால்,
ஆரம்ப நிலையில் இம் மருத்துவமனைக்கு வரும்
புற்று நோயாளிகளில் 80–90 சதவிகிதத்தினர் வரை
முழுமையாக குணமடைகின்றனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள்
1912–ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில்,
எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற
முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.
அவர் ஆற்றிய பணிகளை நினைவு கூறும் விதத்தில்
அவரது சொந்த ஊரான புதுக்கோட்டையில் உள்ள
அரசு மருத்துவமனைக்கு
''டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அரசு பொது மருத்துவமனை''
என பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பதை
இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

தியாக உள்ளம் படைத்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி
அவர்கள் தொடங்கிய புற்றுநோய் நிறுவனம்,
இந்த அளவிற்கு வளர்ந்ததற்கு ஒரே காரணம்
டாக்டர் வி.சாந்தா அவர்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா
அவர்களால் சாதனை படைத்த மகளிருக்கு
ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் நாள்
மகளிர் தினத்தில் வழங்கப்படும்
ஔவையார் விருதினை, முதன்முதலில்
2013 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா
அவர்களிடமிருந்து பெற்றவர்தான்
இம்மையத்தின் இயக்குநர் டாக்டர் வி.சாந்தா அவர்கள்.

தமிழ்நாடு  மட்டும் அல்லாது,
பிற மாநிலத்தில் இருந்து வரும்
மிகவும் வறிய நிலையிலுள்ள நோயாளிகளுக்கு
இலவச புற்றுநோய் சிகிச்சை அளிப்பதை
அடையாறு புற்றுநோய்  சிகிச்சை மையம்
கொள்கையாக கொண்டுள்ளது.

அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின்
உன்னதமான சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக
தமிழ்நாடு அரசு இம்மையத்திற்கு
தேவையான உதவிகளை வழங்கி வருவதுடன்,
இதனை மாநில அளவில் புற்றுநோய் சிகிச்சைக்கான,
தலைமை மையமாகவும் அங்கீகரித்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்களின் முயற்சியின் காரணமாக,
அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தை
ஒரு ஒப்புயர்வு மையமாகக் கருதி
120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் மற்றும்
மருத்துவ கருவிகள் அளிக்கும் வகையில்
மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
இதில் 60 சதவிகிதத்தினை மத்திய அரசும்,
40 சதவிகிதத்தினை மாநில அரசும் வழங்குகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள், 12.6.2013 அன்று
நடைபெற்ற சென்னை புற்றுநோய் மையத்தின்
வைரவிழாவை தொடங்கி வைத்து உரையாற்றுகையில்,
"புற்றுநோய் மருத்துவ நிலையத்தால்
கட்டப்பட்டு வரும் வைர விழா கட்டடத்திற்கு,
தமிழ்நாடு அரசு சிறப்பு மானியமாக
5 கோடி ரூபாய் வழங்கும்" என்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட
மானியத் தொகையான 5 கோடி ரூபாயைக்
கொண்டு இந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது
என்பதை  நான் மட்டற்ற மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்கிறேன்."

அடையார் புற்றுநோய் மையம் தமிழ்நாட்டில்
புற்றுநோய் பாதிப்புக்குள்ளானவர்களைப்
பதிவு செய்ய மாநில அரசின் தலைமை நிறுவனமாகத் திகழ்கிறது.

அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையம்,
அரசுடன் இணைந்து புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம்
மாவட்டங்களில் புற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களை
கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.
தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களுக்கும்
படிப்படியாக விரிவுபடுத்தப்படவிருக்கிறது.

அரசு மருத்துவமனைகளை புற்றுநோய்க்கான
சிகிச்சை அளிக்கும் வகையில் வலுப்படுத்தியதுடன்,
அவற்றின் மூலம் புற்றுநோய் பாதிப்புக்கு
உள்ளானவர்களைக் கண்டறிந்து,
அவர்களுக்கு உரிய சிகிச்சையும்
தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

அரசின் மருத்துவ மையங்கள் மூலம்
30 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு,
கருப்பைவாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய்,
இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்
போன்றவற்றைப் பரிசோதித்து
கண்டறியப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நோய் அறிகுறிகளுடன் உள்ள
நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகள் மூலமும்,
மாண்புமிகு முதலமைச்சரின் ஒருங்கிணைந்த
மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்
பட்டியலிடப்பட்டு அங்கீகரிப்பட்டுள்ள
மருத்துவமனைகளிலும், சிகிச்சையளிக்கப்பட
ஆவன செய்யப்பட்டுள்ளது.

கடந்த 6 வருடங்களில்,
1 கோடியே 71 லட்சம் கோடி பெண்களுக்கு
கருப்பைவாய் புற்றுநோய் கண்டறிதலுக்கான
பரிசோதனையும் 2 கோடியே 10 லட்சத்து
பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்
கண்டறிதலுக்கான பரிசோதனையும்
செய்யப்பட்டுள்ளன. அதில்,

இந்நோய்களுக்கான அறிகுறிகளுடன்
கண்டறியப்பட்டவர்கள் உயர் நிலை
மருத்துவமனைகளுக்கு உரிய சிகிச்சைக்காக
அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

புற்றுநோய் அறிகுறிகளைக் கண்டறிந்து
சிகிச்சை அளிப்பதற்கு உதவியளிக்கும் விதமாக,
தமிழ்நாடு அரசு 10 மருத்துவக் கல்லூரிகளில்
ஏற்கனவே உள்ள பழைய கோபால்ட்
கதிர் வீச்சு மருத்துவக் கருவிகளுக்கு பதிலாக
மொத்தம் 199 கோடி ரூபாய் மதிப்பில்
புதிய கருவிகளை அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசு, சென்னை அடையாறு
புற்றுநோய் மையத்திற்கான உதவிகளை
தொடர்ந்து அளித்து அதன் புரவலராகத்
தொடர்ந்து செயல்படும் என்பதை
மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு சிகிச்சைக்கு வருபவர்களுக்கு
சிறந்த உடல் நலத்தையும்,
மிகச் சிறந்த நம்பிக்கையையும் வழங்கும்
இந்த அடையார் புற்றுநோய் சிகிச்சை மையத்திற்கு
எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும்,
இங்கு பணிபுரியும் அனைவருக்கும்
எனது பாராட்டுதல்களையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**